**கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதி திட்டம் - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதித் திட்டத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விபரமான வருமான கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1999 இன் 20 ஆம் இலக்க கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதி அதிகாரச்சட்டம் மற்றும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் அதிகாரச் சட்டத்தினதும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் திட்டத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, திட்டத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது திட்டத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு

எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிதியம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் திட்டத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக கல்லூரியின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக திட்டத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க கல்லூரி செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்பு

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள்

| | உரிய நியமங்களுக்கான தொடர்புகளுடன் இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 16 இன் 51 ஆம் பந்தியின் பிரகாரம் | ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களுள் உள்ளடக்கப்பட்ட மோட்டார் | விளைதிறனான ஆயுட்காலத்தை மீளாய்விற்கு |

| | | | |
|---|---|---|---|
| | ஒரு சொத்தின் பயன்தரும் ஆயுள்காலம் ஒவ்வொரு நிதி ஆண்டும் மீளாய்வு செய்யப்பட வேண்டிய போதிலும் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்ட எனினும், தொடர்ச்சியாக பயன்படுத்தப்பட்டு வந்த ரூபா 25,801,935 கிரயமான ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் தொடர்பாக அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. | வாகனங்கள் மீள்மதிப்புச் செய்யப்பட்டு கணக்கு வைக்கப்பட்டுள்ளதுடன் ஏனைய சொததுக்கள் வரலாற்றுக் கிரயத்தின் அடிப்படையில் கணக்கு வைக்கப்பட்டுள்ளன. முழுமையாகப் பெறுமானத் தேய்வு செய்யப்பட்ட சொத்துக்களுக்கு மத்தியில் பயன்படுத்தக்கூடிய சொத்துக்களை மீண்டும் மீள் மதிப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் ஏனைய சொத்துக்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | உட்படுத்தி நிதிக் கூற்றுக்களில் செம்மையாக்குதல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 37 இன் 59 ஆம் பந்தியின் பிரகாரம் செயற்திறனான பங்களிப்பினை இனங்காணல் மற்றும் விவசாய ஓய்வூதியக் காரர்களுக்கான மரணப் பணிக்கொடையினை காப்பீட்டு காலக் கணிப்பு மதிப்பீட்டின் மூலம் கணிப்பீடு செய்ய வேண்டிய போதிலும் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,077,622,157 தொகையான விவசாயிகளின் மரணப் பணிக்கொடை நிதியம் தொடர்பான பொறுப்புக்கள் காப்பீட்டு காலக் கணிப்பு மதிப்பீட்டின் மூலம் கணிப்பீடு செய்யப்பட்டு காலரீதியாக நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை. | விவசாயிகள் ஓய்வூதியத் திட்டத்திலிருந்து தவணைப் பணத்தை பெற்று இந் நிதியத்தை செயற்படுத்தக் கூடியதாக இருந்ததுடன் ஆண்டின் போது மேற்கொள்ளப்படுகின்ற பணிக்கொடைக் கொடுப்பனவுகள் இந்நிதியத்திற்கு வரவு வைக்கப்படுகின்றன. புதிய ஓய்வூதியத் திட்டத்தினை ஆரம்பிப்பதோடு வருடாந்தக் காப்பீட்டுக் காலக் கணிப்பு மதிப்பீட்டினை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | மரணப் பணிக் கொடை நிதியம் தொடர்பான பொறுப்புக்கள் காப்பீட்டு காலக் கணிப்பு மதிப்பீட்டின் மூலம் கால ரீதியாக கணிப்பீடு செய்யப்படுதல் வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மஹியங்கனை, எல்பிடிய மற்றும் அனுராதபுரத்தில் பேணப்பட்டு வருகின்ற 3 உத்தியோகபூர்வ இல்லங்கள் அமைந்துள்ள சபைக்குச் சொந்தமான 76.6 பேர்ச்ஸ் காணியும் எம்பிலிபிடிய உத்தியோகபூர்வ இல்லக் கட்டிடங்களின் பெறுமதியும் மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களுக்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை. | இது சம்பந்தமாக பிரதி / உதவி பணிப்பாளர்களுடன் கலந்தாலோசித்து தேவையான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் விரைவாக அந்நடவடிக்கைகளை முடிவுறுத்தி மதிப்பீட்டுப் பெறுமதியை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கட்டிடத்தின் பெறுமதியை மதிப்பீடு செய்து நிதிக்கூற்றுக்களில் காட்டுதல் வேண்டும். |

### 1.5.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| விடயம் | தொகை | வழங்கப்படாத கணக்காய்வு சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|---|---|
| | ரூபா | | | |
| செலுத்தப்படாத இழப்பீடு | 76,174,434 | செலுத்தப்படாத இழப்பீட்டுப் பதிவேடு அல்லது கணனி குறிப்பு | அக்காசோலைகளின் விபரம் தனித்தனியாக கணனியில் வைத்திருக்கப்படுவதுடன் தகவல்கள் உரிய கோவைகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன. அக்காசோலைகளை வருமானத்திற்கு எடுத்துக் கொள்ளும் போது இலகுவாக இனங்காணக் கூடிய வகையில் கோவை செய்யப்பட்டள்ளதுடன் மீண்டும் ஒரு தடவை அக்காசோலைகளுக்காக உரிமை கோரப்படும் சந்தர்ப்பத்தில் உரிய கோவைகளைப் பரீட்சித்துப் பார்த்து கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படும். | செலுத்தப்படாத இழப்பீட்டுக் காசோலைகளை இனங்காண்பதற்கு முடியுமான வகையில் பதிவேட்டினை அல்லது கணனி குறிப்புக்களைப் பேணுதல் வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருங்கிணைப்பு அமைச்சில் சேவைக்காக விடுவிக்கப்பட்ட ஒரு உத்தியோகத்தருக்கு சபையினால் செலுத்தப்பட்ட சம்பளம் ரூபா 228,015 தொகையை மீளளிப்புச் செய்யாது 9 ஆண்டுகளாக முன்கொண்டு வரப்பட்டன. | கணக்காண்டின் ஆரம்பத்தில் கிடைக்க வேண்டிய சம்பளம் ரூபா 342,023 மீதி காணப்பட்டதுடன், 2021 ஆம் ஆண்டின் போது ரூபா 57,004 பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் மிகுதியை உரிய உத்தியோகத்தரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | மீளளிப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) 01 ஆண்டிலிருந்து 25 ஆண்டுகள் வரையான பழமையான ரூபா 1,764,637 தொகையான கடன்கள் மற்றும் முற்பணங்கள் மீதியை மீளாய்வாண்டின் போதும் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நீண்டகாலமாக அறவீடு செய்யப்படாத ஊழியர் கடன்கள் மற்றும் முற்பணங்கள் தொடர்பான விபரம் பணிப்பாளருக்கு (நிருவாகம்) வழங்கப்பட்டுள்ளதுடன் மேலும் தகவல்களை ஆய்வு செய்ததன் பின்னர் இக்கடனை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | கடன்கள் மற்றும் முற்பணங்களை விரைவாக தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6.2 செலுத்த வேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 426,871 தொகையான மீளச் செலுத்த வேண்டிய கேள்வி வைப்புக்களின் பெறுமதி மீளாய்வாண்டின் இறுதிவரை தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை. | இம்மீதியில் குறிப்பிட்ட மீளச் செலுத்திய கேள்விப் பணத்திற்காக உரிய தரப்பினர்களுக்குத் தெரியப்படுத்தி இப்பணத்தை அவர்களால் முறையாக வேண்டுகையில் செலுத்துவதற்கு 2021 ஆம் ஆண்டின் போது நடவடிக்கை எடுக்கப்படும். | இம்மீதியினைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறைப் பொறுப்பின் கீழ் காட்டப்படுகின்ற 2018-2019 காலப்பகுதிக்குரிய அச்சிடல் செலவுகள், கலப்பு கடன் கொடுத்தோர், பயிலுனர் காப்புறுதி ஊக்குவிப்பு படிகள் என்பனவாக செலுத்த வேண்டிய ரூபா 999,713 கூட்டுமொத்த மீதிகள் தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை. | இம்மீதிகளை சரியாக கணக்கிணக்கத்திற்கு உட்படுத்தி தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இம்மீதிகளைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 1992 இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| (i) நிதிப்பிரமாணம் 177(1) | சேகரிக்கப்படுகின்ற அரசாங்க பணம் நாளாந்தம் அல்லது முடியுமான அளவு விரைவாக வங்கிக்கு அனுப்பிவைத்து பற்றுச்சீட்டினைப் பெற்றுக் கொள்ளல், அரசாங்கத்திற்கான எப்பணமாக இருந்தாலும் சேகரித்தல் உத்தியோகத்தர்களின் கடமையாவதுடன் காலி மற்றும் புத்தளம் மாவட்ட அலுவலகங்களில் வைப்புச் செய்தலின் தெரிவுப் பரிசோதனைக்கு இணங்க காப்புறுதி உத்தியோகத்தர்களா | வெளிக்களத்தில் சேகரிக்கப்படுகின்ற தவணைப் பணங்களை வங்கியில் வைப்புச் செய்வதில் தாமதங்கள் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டதனால் அதனைத் தவிர்த்துக் கொள்வதற்கு தேவையான நடவடிக்கை எடுத்து தெளிவுபடுத்தல் மேற்கொள்ளப்பட்டது. அவ்வாறு அறவிடப்படுகின்ற தவணைப் பணத்தை ஒப்பீடு செய்யும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன் எதிர்காலத்தில் அவ்வாறான நிலைமை உருவாகாமைக்குத் தேவையான நடவடிக்கை | சேகரிக்கப் படுகின்ற பணத்தை தாமதமின்றி வங்கியில் வைப்புச் செய்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ல் சேகரிக்கப்பட்ட கமத்தொழில் மோட்டார் வாகன காப்புறுதி தவணைப் பணம் 1 மாதத்திலிருந்து 2 மாதங்கள் வரை தாமதித்து அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்பது அவதானிக்கப்பட்டது. | எடுக்கப்பட்டுள்ளது. | |
| (ii) | நிதிப்பிரமாணம் 261(3) | போதியளவு பணம் இல்லாதவிடத்து அதிலிருந்தான ஏதாவது கொடுப்பனவினை காசேட்டில் பதிவு செய்தல் அல்லது கொடுப்பனவிற்காக காசோலையை வழங்குதல் செய்யப்படாதிருத்தல் வேண்டும். அவ்வாறே காணப்படுகின்ற கொடுப்பனவைப் போல அண்மித்த கொடுப்பனவுகளையும் நிறுத்தி வைக்காது கொடுப்பனவுகளை மேற்கொள்ளக் கூடிய வகையில் நிர்ணயிக்கப்பட்ட அதிகாரிகளுக்கு முறைப்படியாக ஏற்கனவே வேண்டுதல் விடுத்து போதியளவு பணத்தைப் பெற்றுக் கொள்வதனை கவனித்துக் கொள்ள வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்படாமையின் அடிப்படையில் காப்புறுதி இழப்பீட்டிற்காக எழுதப்பட்ட ரூபா 55,720,568 மொத்த பெறுமதியான 1,780 காசோலைகள் மீண்டும் | போதியளவு பணம் கணக்குகளில் இல்லாதிருந்தால் சபையினால் காசோலைகளை எழுதுதல் அல்லது காசேட்டிற்கான வவுச்சர்கள் எழுதுதல் செய்யப்படுவதில்லை. தேவைப்பாட்டின் பிரகாரம் இழப்பீடுகளைக் கொடுப்பனவு செய்யும் போது பணத்தைப் பெற்றுக் கொள்வதற்கு முன்னர் இழப்பீட்டினைச் செலுத்தி பின்னர் பொதுத்திறைசேரியிட மிருந்து மீள்நிரம்பல் செய்யப்படுகின்ற சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. அதற்கிணங்க படைப் புழுப் பாதிப்புக்களுக்காக 100 சதவீத பாதிப்பினை விட குறைவாக பாதிப்பு ஏற்பட்ட அம்பாறை மாவட்டத்தின் விவசாயிகளுக்கு இழப்பீட்டினைச் செலுத்துவதற்குரிய இக்காசோலைகள் சபையில் காணப்பட்ட நிதியைப் பயன்படுத்தி தயாரிக்கப்பட்டதுடன் அமைச்சினால் பணத்தை வழங்குதல் தாமதித்ததனால் அக்காசோலைகள் விவசாயிகளுக்கு | காசோலைகளை எழுதுவதற்கு முன்னர் பணம் உள்ளது என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வருமானத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருந்தது. | வழங்கப்படாது நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. எனினும் படைப்புழுப் பாதிப்பினால் 100 சதவீதம் பயிர்களுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ள விவசாயிகளுக்கு கொடுப்பனவு செய்வதற்காக மாத்திரம் அரசாங்கத்தினால் பணம் வழங்கப்பட்டதுடன் குறைவாக ஏற்பட்டுள்ள பாதிப்புக்களுக்காக பணம் வழங்கப்படாததனால் மேற்கூறிய ரூபா 55,720,568 தொகையான மொத்த பெறுமதியை வருமானத்திற்கு எடுத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அம்பாறை மாவட்டத்தில் அரைவாசிப் பாதிப்பிற்காக காசோலைகள் எழுத வேண்டி ஏற்பட்டதானது அம்மாவட்டத்தில் படைப்புழுப் பாதிப்பிற்காக 100 சதவீத இழப்பீடானது தொடக்கத்தில் செலுத்தப்படாததனாலும் இழப்பீட்டினைப் பெற்றுக் கொள்வதற்கு விவசாயிகள் ஒன்று கூடுதல் இடம்பெற்றதனாலும் விவசாய அமைப்புக்களால் அடிக்கடி இழப்பீட்டினைக் கோரி சச்சரவுகளை மேற்கொண்டமையும் காரணமாக இருந்தது. | |
| (iii) | நிதிப்பிரமாணம் 762 | இருப்புக் கட்டளை மட்டத்தை இனங்கண்டு அந்த இருப்பு மட்டத்தை பேணாமையின் காரணமாக 2020 ஆம் ஆண்டின் போது 13 | அட்டைகளை கொள்வனவு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தும் தொற்றுநோய் நிலைமையின் | களஞ்சியக் கட்டுப்பாட்டு நடைமுறைகள் பேணப்படுதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | சந்தர்ப்பங்களில் களஞ்சியத்தில் விவசாய மோட்டார் வாகன காப்புறுதி அட்டைகளின் இருப்பு முடிவடைந்திருந்தது. மேலும் அவசர தேவையின் அடிப்படையில் 25,000 காட்களை கொள்வனவு செய்யும் போது விமானக் கட்டணமாக ரூபா 148,000 மேலதிக கிரயத்தை மேற்கொள்ள வேண்டியிருந்ததுடன் முறையாக களஞ்சிய இருப்புக் கட்டுப்பாட்டு நடைமுறையினை பயன்படுத்தாமையின் காரணமாக இப்பணம் சபையினால் செலவு செய்ய வேண்டி ஏற்பட்ட மேலதிக கிரயம் என்பதாக அவதானிக்கப்பட்டது. | காரணமாக முறையாக அட்டைகளை வழங்க முடியாதிருந்ததுடன் தேவைப்பாட்டின் அடிப்படையில் விரைவாக அட்டைகளைக் கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கிடைக்கின்ற இருப்புக்கள் மாவட்ட அலுவலகங்களின் தேவைப்பாட்டின் பிரகாரம் பகிர்ந்தளித்தல் இடம்பெற்றுள்ளதனால் களஞ்சியத்தினுள் அட்டைகளின் இருப்பு முடிவடைந்துள்ள சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. இக்குறைபாடுகளானது கொள்வனவு செய்த தரவு முறைமைகளின் மூலம் முகாமைத்துவம் செய்யப்பட்டுள்ளது. | |
| (ஆ) | அங்கீகரித்த ஆட்சேர்ப்பு நடைமுறைகள் | i. பகிரங்க அறிவித்தலை வெளியிடுவதன் மூலம் விண்ணப்ப படிவங்களை கோரியதன் பின்னர் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைகளின் மூலம் வெளிவாரி அல்லது உள்ளக விண்ணப்ப தாரர்களைச் சேர்த்துக் கொள்ள வேண்டுமெனக் குறிப்பிடப் பட்டிருந்தும் அதற்கு முரணாக பணிப்பாளர்கள் சபையின் | பணிப்பாளர் நாயகத்தினால் தமது கடமைக்கு மேலதிகமாக பணிப்பாளர் (நிருவாகம்) பதவிக்குரிய செயற்பாடுகளையும் நிறைவேற்றுவதனால் பணிப்பாளர் (நிருவாகம்) பதவிக்காக கனிஷ்ட உத்தியோகத்தர் ஒருவரை சேர்த்துக் கொள்ளும் தேவைப்பாடு இருந்தது. பணிப்பாளர் சபைக்குத் தெரியப்படுத்தி ஒரு ஆண்டு காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் சேர்த்துக் கொள்ளப்பட்டது. மூன்றாந் தரப்பு காப்புறுதி நடவடிக்கைகளின் போது தொடுக்கப்பட்டுள்ள வழக்குகள் சம்பந்தமான | ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

அங்கீகாரத்தின் அடிப்படையில் பணிப்பாளர், பிரதிப் பணிப்பாளர், முறைமை நிருவாக உத்தியோகத்தர், அபிவிருத்தி உத்தியோகத்தர், முகாமைத்துவ உதவியாளர், சராசரி, அலுவலக உதவியாளர் ஆகிய பதவிகளுக்கு ஓய்வு பெற்ற 8 உத்தியோகத்தர் களின் சேவைக் காலத்தை நீடிப்பதன் அடிப்படையில் 8 உத்தியோகத்தர் கள் ஒப்பந்த மற்றும் பயிற்சி அடிப்படையிலும் 40 உத்தியோகத் தர்கள் அமைய அடிப்படையிலும் சேர்த்துக் கொள்ளப் பட்டிருந்தனர்.

தாமதங்களை நீக்கி அந்த வழக்குகளை செயற்படச் செயற்வதற்காக 2020 ஆம் ஆண்டிற்காக அங்கீகரிக்கப்பட்ட அபிவிருத்தி உத்தியோகத் தர் பதவி மட்டத்தில் ஒரு ஆண்டு காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் அபிவிருத்தி உத்தியோகத்தர் (சட்டம்) பதவிக்காக ஒரு உத்தியோகத்தர் சேர்த்துக் கொள்ளப்பட்டார். மருத்துவர்களுடன் ஒருங்கிணைப்பினை மேற்கொள்வதற்கு பணிப்பாளர்கள் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் ஒரு ஆண்டிற்கு ஒப்பந்த அடிப்படையில் அபிவிருத்தி உத்தியோகத்தர் (கால்நடை காப்புறுதி) ஆக ஒரு உத்தியோகத்தரை சேர்த்துக் கொண்டு அப்பிரிவின் செயலாற்றலுக்கு பங்களிப்பினை வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. பொருத்தமான ஒருவரைச் சேர்த்துக் கொள்ளும் வரை சேவையை துரிதப்படுத்துவதற்காக உதவிப் பணிப்பாளர் (தகவல் தொழில்நுட்பம்) பதவிக்காக 06 மாதங்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் சேர்த்துக் கொள்ளப்பட்டார். இப்பதவிக்காக தற்பொழுது ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

| | | | |
|---|---|---|---|
| | | சபையின் கொள்கைகளுக்கு இணங்க தலைவருக்கு ஒப்பந்த அடிப்படையில் ஒரு சாரதி சேர்த்துக்கொள்ளப்பட்டார். | |
| ii. | ஒவ்வொரு சேவை தொகுதியினையும் சார்ந்த உத்தியோகத்தர்களுக்கு வினைத் திறமை காண் தடைப் பரீட்சையானது ஆகக் குறைந்தது ஒரு ஆண்டிற்கு ஒரு தடவை அல்லது தேவைப்பாட்டிற்கு இணங்க நடாத்தப்பட வேண்டியதுடன் நியமன திகதியிலிருந்து 03 ஆண்டுகளுக்குள் முதலாவது வினைத் திறமை காண் தடைப் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும். எவ்வாறாயினும், 2017 சனவரியிலிருந்து இன்று வரை வினைத்திறமை காண் தடைப் பரீட்சை நடாத்தப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக 2016-2017 காலப் பகுதியின் போது சபையில் சேவைக்கு இணைத்துக் | வினைத்திறமை காண் தடைப் பரீட்சையானது 2020 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியாக ஒவ்வொரு மாவட்டத்திலும் நடாத்துவதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தும் கொரோனா தொற்றுநோய் நிலைமையின்கீழ் இப்பரீட்சையை நடாத்துவதற்கு முடியாதிருந்ததுடன் 2021 ஆம் ஆண்டின் முதல் 04 மாதங்களில் பரீட்சையை நடாத்துவதற்கு நடவடிக்கைகள் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தும் கொரோனா நிலைமையின் காரணமாக அதுவும் முடியாதிருந்தது. நிர்ணயிக்கப்பட்டவாறு வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையினை நடாத்துவதற்காக உரிய நிறுவனங்களுடன் ஒருங்கிணைப்புச் செய்யப்படும். | ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கொள்ளப்பட்ட 12 உதவிப் பணிப்பாளர்களுக்கு 11 அபிவிருத்தி உத்தியோகத்தர் களுக்கு, மற்றும் 15 முகாமைத்துவ உதவியாளர் களுக்கு நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதியில் வினைத் திறமை காண் பரீட்சையில் சித்தியடைவதற்கு முடியாதிருந்தது. | | |
| (இ) | 1999 இன் 20 ஆம் இலக்க கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதி அதிகாரச் சட்டம் | | | |
| (i) | 7(அ) பிரிவு | விவசாயிகளுக்கு நிரந்தர தன்மையை வழங்குதல் மற்றும் விவசாய உற்பத்தியை மேம்படுத்தும் குறிக்கோளுடன் நட்டங்களுக்காக அவர்களுக்கு நட்டயீட்டினை வழங்குவதற்காக விவசாயிகளின் நலன்களை முன்னிட்டு முழுமையான காப்புறுதி முறைமை தோற்றுவிக்கப்பட்டு அமுல்படுத்தப்பட வேண்டியிருந்தும் சபையினால் பேணப்பட்டு வந்த கெதட அருண காப்புறுதித் திட்டம் தொடர்பாக 8,185 விவசாயிகளுக்கு தகமையுள்ள 4 ஆண்டுகள் | விவசாயிகளால் உரிமை கோரப்படாத ரூபா 70,800,200 தொகையான இழப்பீட்டுப் பணம் தொடர்ச்சியாக விவசாயிகளால் உரிமை கோரப்படாததன் காரணமாக விவசாயக் காப்புறுதி நிதியத்திற்கு மாற்றுவதற்காக பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அப்பணம் விவசாய தரவு முகாமைத்துவ முறைமையை உருவாக்குவதற்காக வழங்குவதற்கு அங்கீகாரம் கிடைத்துள்ளது. | விவசாயிகளை இனங்கண்டு தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பழமையான ரூபா 700,800,200 இழப்பீட்டுப் பணமானது கணக்கு இலக்கம், விவசாயிகளின் பெயர், அடையாள அட்டை இலக்கம் என்பன பொருந்தாமையின் காரணமாக வங்கியினால் திருப்பி அனுப்பிவைக்கப் பட்டிருந்ததுடன் உரிய விவசாயிகளை இனங்கண்டு தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | | |
| (ii) | 7(இ) பிரிவு | கமத்தொழில் மற்றும் விஞ்ஞானரீதியான உற்பத்திகள் மற்றும் மருந்து மூலிகைகள், மீன்பிடி மற்றும் வன உற்பத்திப் பொருட்களை களஞ்சியப்படுத்துதல் மற்றும் காலப்பகுதிக்கு வைத்திருத்தல் சம்பந்தமான காப்புறுதி முறைமையானது விவசாயிகளின் நலனுக்காக தோற்றுவிக்கப்பட்டு அமுல்படுத்தப் படவேண்டிய போதிலும் களஞ்சிய காப்புறுதிக்காக திட்டங்கள் தயாரித்திருந்தும் அது அமுல்படுத்தப்பட்டிருக் க வில்லை. | சபையில் களஞ்சிய காப்புறுதித் திட்டம் அமுல்படுத்தப்பட்டிருந்த போதிலும் 2020 ஆம் ஆண்டின் போது விவசாயிகளிடமிருந்து வேண்டுதல்கள் கிடைத்திருக்கவில்லை. களஞ்சிய காப்புறுதிக்காக விவசாயிகள் ஆர்வம் காட்டுவதற்குத் தேவையான தெளிவுபடுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | திட்டங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 1,229,863,654 மிகையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 702,186,912 ஆகும். அதற்கிணங்க நிதி

விளைவுகளில் ரூபா 527,676,742 தொகையான முன்னேற்றம் அவதானிக்கப்பட்டது. இம்முன்னேற்றத்திற்கு மீள்காப்புறுதித் தவணைப் பணமான ரூபா 576,361,848 தொகை மீளாய்வாண்டிலிருந்து செலுத்தாமை மற்றும் இழப்பீட்டுக் கொடுப்பனவிற்காக பொதுத் திறைசேரியிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட தவணைப் பணம் 2019 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூபா 210,120,000 ஆல் அதிகரித்தல் என்பன பிரதான காரணமாக இருந்தன.

## 2.2 பிரதான வருமானங்கள் மற்றும் செலவு விடயங்களின் போக்கு பகுப்பாய்வு

பெரிய அளவிலானவற்றைப் போல சிறிய அளவிலான கால்நடை கைத்தொழிலாளர்களின் ஆபத்துக்களைக் குறைத்து பாதுகாப்பினை உறுதிப்படுத்துவனை குறிக்கோளாகக் கொண்டு அமுல்படுத்தப்பட்ட கால்நடை காப்புறுதித் திட்டங்களின் வருமானம் துரிதமாக குறைவடைந்திருந்தது. அதற்கிணங்க 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2020 ஆம் ஆண்டளவில் கால்நடை காப்புறுதி வருமானம் 57 சதவீதத்தால் அதாவது ரூபா 13,391,254 இலிருந்து ரூபா 5,780,196 வரை ரூபா 7,611,058 ஆல் குறைவடைந்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஒரு அலுவலகக் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக 2008 யூன் 04 ஆந் திகதி இலங்கை காணி மீட்பு மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்திற்கு சபையினால் ரூபா 565,800 முற்பணம் வழங்கப்பட்டிருந்ததுடன் முற்பணங்கள் வழங்கி 13 ஆண்டுகள் கடந்திருந்தும் திட்டங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இக்காணி சபைக்கு தலைமை அலுவலக கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக வழங்கப்பட்ட ஒரு காணியாக இருந்ததுடன் 2021 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் மிகுதி வேலை நடவடிக்கைகள் உள்ளடக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் அலுவலகத்தை நிர்மாணிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. | திட்டங்களின் பிரகாரம் நிர்மாண நடவடிக்கைகளை பூர்த்தி செய்தல் வேண்டும். |
| (ஆ) | 2020 நவம்பர் 19 ஆந் திகதி முகாமைத்துவ உதவியாளர்களைச் சேர்த்துக் கொள்வதற்காக ரூபா 237,654 செலவு செய்து 3 பத்திரிகைகளில் அறிவித்தல் வெளியிடப்பட்டு விண்ணப்பங்களைக் கோரும் இறுதி திகதியாக | 2020 ஆம் ஆண்டிற்காக அங்கீகரிக்கப்பட்ட முகாமைத்துவ உதவியாளர்களின் அளவினைச் சேர்த்துக் கொள்வதற்கு பத்திரிகை அறிவித்தல்கள் வெளியிடப்பட்டிருந்ததுடன் அவர்களை தெரிவு செய்து நேர்முகப் பரீட்சைகளை | பத்திரிகை அறிவித்தல்களின் பிரகாரம் ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| 2020 திசெம்பர் 31 ஆந் திகதி குறிப்பிடப்பட்டிருந்தும் அதனை கவனத்திற்கு எடுத்துக்கொள்ளாது பணிப்பாளர் நாயகத்தினால் மத்திய மாகாணத்திலிருந்து 16 நபர்களை நேர்முகப் பரீட்சைக்கு அழைத்து அவர்களில் 07 பேர் 2020 நவம்பர் 26 ஆந் திகதி சேவைக்கு சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்தனர். இதன் காரணமாக பத்திரிகை அறிவித்தலுக்காக செலவு செய்யப்பட்ட ரூபா237,654 தொகை சிக்கனமற்ற செலவாக அவதானிக்கப்பட்டது. | நடாத்தும் வரை அமைய அடிப்படையில் 07 உத்தியோகத்தர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்தனர். எதிர்காலத்தில் கோரப்பட்ட விண்ணப்பங்களுக்காக முறைப்படியாக நேர்முகப் பரீட்சைகளை நடாத்தி தெரிவு செய்தல்கள் மேற்கொள்ளப்படும். | |

## 3.3 முகாமைத்துவ செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் இறுதியில் நிறுவனத்தின் அங்கீகரித்த 421 பதவிப் பெயர்களின் 15 பதவிகளுக்கான வெற்றிடங்கள் 155 ஆகக் காணப்பட்டதுடன் தலைமை அலுவலக, மாவட்ட அலுவலக மற்றும் வெளிக்கள கடமை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இவ்வெற்றிடங்கள் தடையாகக் காணப்பட்டது என்பது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | 2020 ஆம் ஆண்டளவில் நிறுவனத்தின் அங்கீகரித்த பதவியணியினர்களை முழுமையாகச் சேர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாததுடன் இப்பதவியணியினர்கள் அங்கீகரிக்கப்பட்ட 2011 ஆம் ஆண்டிலிருந்து இதற்குச் சமனான அளவினை விட குறைவாகவோ அதிகமாகவோ சேர்த்துக் கொள்ளுதல் இடம்பெறவில்லை. இதற்கான காரணம் சபை தற்பொழுது சுய நிதியின் அடிப்படையில் நடவடிக்கை எடுப்பதனால் முழுப் பதவியணியினையும் ஒரே தடவையில் சேர்த்துக் கொள்ளுதல் இடம்பெறாது நிதி ஸ்திரத் தன்மையின் அடிப்படையில் அவ்வவ்போது சேர்த்துக் கொள்ளுதல் அதிகரிக்கப்பட்டு வந்தது. தற்பொழுது சபையினால் | அங்கீகரித்த பதவியணியினர் எண்ணிக்கையை மீளாய்விற்கு உட்படுத்துதல் அல்லது வெற்றிடங்களை நிரப்புதல் இடம்பெறுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | ஊழியர்களைச் சேர்த்துக் கொள்ளுதல் இடம்பெற்று வருகின்றது. | |
| (ஆ) | காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்துடன் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட மீள் காப்புறுதி உடன்படிக்கையின் பிரகாரம் 2019 சிறு போகத்திற்கு ஒரு விவசாயிக்காக அறிக்கையிடப்படக்கூடிய முழுமையான இழப்பீட்டுப் பெறுமதியில் தொடக்க ரூபா 10,000 இனை செலுத்துவதற்காக காப்புறதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திடமிருந்து இன்னும் பெற்றுக்கொள்ள வேண்டியிருந்த ரூபா 312 மில்லியன் நிலுவைப் பணத்தைப் பெற்றுக் கொள்வதற்குப் பதிலாக 2020 ஆம் ஆண்டில் உடன்படிக்கை இரத்துச் செய்யப்பட்டு ரூபா 148,380,848 தொகையை மாத்திரம் பெற்றுக் கொண்டதன் காரணமாக சபைக்கு ரூபா 163,619,152 நட்டம் ஏற்பட்டிருந்தது. | 2019 சிறு போகத்திற்காக மீள்காப்புறுதியின் கீழ் பெற வேண்டிய காப்புறுதி இழப்பீட்டுப் பணத்தை வழங்குமாறு பல சந்தர்ப்பங்களில் அவர்களுக்கு எழுத்து மூலமும் வாய்மொழி மூலமும் தெரியப்படுத்தப் பட்டிருந்ததுடன் இது தொடர்பாக பொதுத் திறைசேரி மற்றும் தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்துடன் கலந்தாலோசித்ததன் பின்னர் மீள்காப்புறுதியினை தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திடமிருந்து பெற்றுக் கொள்வதற்கு முடியாதிருந்ததனால் சபையினால் மீள் காப்புறுதிக்காகச் செலுத்திய தவணைப் பணம் மீளப் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. 2019 ஆம் ஆண்டிற்கான இழப்பீட்டுப் பணத்தில் தொடக்க ரூபா 10,000 பணத்தை செலுத்துவது தொடர்பாக அனைத்து பணமும் தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தினால் சபைக்குச் செலுத்தப்பட்டுள்ளது. அதற்கிணங்க மீள்காப்புறுதி திட்டம் அமுல்படுத்தப்படாததன் காரணமாக ரூபா 163,619,152 பெற வேண்டியதாக கணிக்கப்பட்டுள்ள தொகை சபைக்கு கிடைத்திருக்கவில்லை. | காலப்பகுதிக்குரிய இழப்பீட்டுப் பணத்தை காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திடமிருந்து பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | விவசாயிகள் ஓய்வூதியம் மற்றும் சமூக பாதுகாப்பு நலத் திட்டத்திற்குரிய ‘‘விவசாயிகளின் மரணப் | சபையின் அனைத்து நிதிகளுக்குமாக தனித்தனியான வங்கி நடைமுறைக் கணக்குகள் | விவசாயிகள் ஓய்வூதிய நிதியத்தின் இறுதிப் பொறுப்பினை |

| | | | |
|---|---|---|---|
| | பணிக்கொடை நிதியத்திற்காக'' தனியான வங்கி கணக்கு பேணப்படாமையின் காரணமாக மீதி ரூபா 1,077,622,157 தொகையான விவசாயிகளின் மரணப் பணிக்கொடை நிதியிலிருந்து அத்திட்டத்திற்கு வழங்கப்பட்டுள்ள கடன் பணம், அத்திட்டத்தின் பங்களிப்பு பணமாக கிடைக்க வேண்டிய தொகை மற்றும் நிதியத்திலிருந்து நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்ட பெறுமதியும் அதற்குரிய வட்டியும் உள்ளடங்கிய ரூபா 915,938,172 மொத்த தொகை கழிந்ததன் பின்னர் எஞ்சியுள்ள ரூபா 161,683,984 மீதியானது அந்நிதியத்திற்கு எதுவித பிரதிபலன்களையும் செலுத்தாது சபையின் செலவுகளுக்காக மற்றும் திறைசேரி உண்டியல்களில் முதலீடு செய்வதற்காக பயன்படுத்தப்பட்டிருந்தது என்பது அவதானிக்கப்பட்டது. | பேணப்படாததுடன் காணப்படுகின்ற மீதிகள் முதலீட்டு வழிகளில் முதலீடு செய்யப்படுகின்றன. இந்நிதியத்தில் காணப்படுகின்ற பணத்தை இந்நிதியத்திற்காக இலகுவாக இனங்காணக் கூடிய வகையில் தனியான நிலையான வைப்புக்களிலும் திறைசேரி உண்டியல்களிலும் முதலீடு செய்வதற்கு தற்பொழுது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன. | அரசாங்கம் வகிப்பதனால் இவ்வாறான காப்புறுதி நடைமுறையினை அமுல்படுத்தும் தேவைப்பாட்டினை மீண்டும் மீளாய்விற்கு உட்படுத்துதல் வேண்டும். |
| (ஈ) | இருப்புக் கட்டளைப் பதிவேடு பேணப்படாமை மற்றும் களஞ்சிய இருப்பு பதிவேடு நாளதுவரையாக்கப் படாமையின் காரணமாக காப்புறுதி அட்டைகளுக்காக மீண்டும் கட்டளையிட வேண்டிய சந்தர்ப்பத்தினை இனங்காண்பதற்கு முடியாதிருந்தது. | இருப்புக் கட்டுப்பாட்டிற்கான தரவு முறைமையானது சபையிடம் இல்லாததுடன் தற்பொழுது இருப்புக்கள் சம்பந்தமான கணனி மயப்படுத்தப்பட்ட தரவு முறைமை கொள்வனவு செய்யப்பட்டுள்ளதுடன் அதன் மூலம் இருப்பு பதிவேடு நாளதுவரையாக்கப்படும். | இருப்புக் கட்டளைப் பதிவேடு பேணப்படுதல் வேண்டும். |
| (உ) | சாதாரண காப்புறுதியின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ள சுவசெத மற்றும் திடீர் விபத்து | திடீர் விபத்து மற்றும் சுவசெத காப்புறுதி திட்டங்கள் விவசாயிகளுக்காக | செயல் முன்னேற்றத்தை மீளாய்வு செய்து தேவையான |

| | | | |
|---|---|---|---|
| | காப்புறுதி நடவடிக்கைகளுக்காக 2020 ஆம் ஆண்டிற்கான பௌதீக செயல் முன்னேற்றமானது திட்டமிட்ட அளவுடன் ஒப்பிடுகையில் 11 சதவீதத்திற்கும் 37 சதவீதத்திற்கும் இடைப்பட்டதாக இருந்தது. | மேம்படுத்தப்பட்டிருந்தும் காணப்படுகின்ற தொற்று நோய்க் காலத்தின் போது எதிர்பார்த்த இலக்குகள் அடையப்பட்டிருக்கவில்லை. இந்நிலைமையின் காரணமாக அதற்காக மேம்படுத்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் சிக்கலானதாகக் காணப்பட்டதுடன் எதிர்காலத்தில் இக்காப்புறுதி திட்டத்தின் எதிர்பார்த்த இலக்குகளை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | மேம்படுத்தல்களைச் செய்தல் வேண்டும். |
| (ஊ) | குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு காப்புறுதித் திட்டங்களுக்காக பயிர்ச் சேதங்களின் பெறுமதியைத் தீர்மானிப்பதற்கு காலநிலைத் தரவுகளைப் பெற்றுக்கொள்ளல் சபையின் முன்னணி கடமையாக இருந்ததுடன் திட்டமிடப்பட்ட மாவட்டங்கள் தொடர்பாக 1980 இலிருந்து 2019 வரையான காலநிலைத் தரவுகளைப் பெற்றுக் கொள்வதற்காக உலக வங்கியுடன் இணைத்துக் கொள்ளப்பட்ட சர்வதேச நிதிக் கூட்டுத்தாபனத்தால் (IFC) தற்பொழுது ரூபா 1.715 மில்லியன் பணம் வழங்கப்பட்டிருந்தது. சில மாவட்டங்கள் இத்தரவுகளைப் பெற்றுக் கொண்டிருந்தும் தற்பொழுது குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு இழப்பீட்டினை கணிப்பீடு செய்தல் வவுனியா, ஹம்பாந்தோட்டை, கம்பஹா ஆகிய மாவட்டங்களுக்கு மாத்திரம் | தற்பொழுது கம்பஹா, வவுனியா, ஹம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களுக்காக இப்புதிய காப்புறுதித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டிருந்த துடன் அடுத்துவரும் போகங்களில் குருணாகல், அனுராதபுரம், அம்பாறை, கிளிநொச்சி என்பவைகளை உள்ளடக்கிய ஏனைய மாவட்டங்களுக்காகவும் அறிமுகப்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. அதன் போது இப்பழமையான காலநிலை தரவுகள் பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளப்படும். 2021 சிறுபோகத்திலிருந்து குருணாகல், அனுராதபுரம், அம்பாறை, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களுக்காகவும் புதிய காப்புறுதி திட்டங்களை ஆராய்ச்சி மட்டத்தில் தயாரித்து காணப்படுகின்ற திட்டங்களின் கீழ் இழப்பீட்டினைக் கணிப்பதுடன் ஒப்பீடு செய்து மேலும் மெருகூட்டுதல் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | செயற்திட்டத்தை வெற்றிபெறச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

மட்டுப்படுத்தப்பட்டிருந்தமை, திட்டமிடப்பட்ட மேற்கூறிய மாவட்டங்களின் மழை மானியின் மூலம் தரவுகளைப் பெற்றுக் கொள்ளும் போது அவை சார்ந்த மிகவும் சிறிய சுற்றுவட்டம் மாத்திரம் உள்ளடக்கப்படல், வளிமண்டலவியல் திணைக்களத்தின் கீழ் நியமதரமுள்ள மழைமானியை ஸ்தாபிப்பதற்குத் திட்டமிடப்பட்டிருந்தும் வவுனியா மாவட்டத்தில் 03 இடங்களில் மாத்திரம் ஸ்தாபிக்கப்பட்டிருந்தமை ஆகிய விடயங்களின் காரணமாக செயற்திட்ட நடவடிக்கைகள் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டிருக்க வில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

## 3.4 செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) காலி மாவட்ட அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்ட பௌதீக கணக்காய்வுப் பரிசோதனையின் போது 35 பயிர்ச்சேத விண்ணப்ப படிவங்களில் பயிரிடப்பட்ட திகதி, விண்ணப்பித்த திகதி என்பவை வெட்டி மாற்றம் செய்யப்பட்டிருந்தமை, பயிருக்கு சேதம் ஏற்பட்டது என நிர்ணயிக்கப்பட்ட திகதி பூரணப்படுத்தப்படாமை, பயிரிடப்பட்ட திகதியிலிருந்து 07 நாட்களுக்குள் இடம்பெறுகின்ற சேதங்களுக்காக | 2019/2020 பெரும்போகம் வரை 2019 சிறுபோகத்தின் போது கமநல சேவை நிலையங்களுக்கு வழங்கிய விண்ணப்ப படிவங்கள் எஞ்சியிருந்தன. 2019/2020 பெரும்போகத்தில் தொடக்க சந்தர்ப்ப சேதங்களை அறிக்கையிடும் வரை விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர்கள் அந்த விண்ணப்ப படிவங்களை விவசாயிகளுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்திருந்தனர். “ஈ” பகுதிக்குப் பதிலாக அதில் உள்ள அனைத்து தகவல்களையும் | பயிர்ச் சேத விண்ணப்ப பத்திரங்களை சரியாக பூரணப்படுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | விண்ணப்பங்களை சமர்ப்பிக்கின்ற விவசாயிகளுக்கு இழப்பீட்டினைப் பெற்றுக் கொள்வதற்கு தகைமை இல்லாதிருந்த போதிலும் இழப்பீட்டுப் பணம் செலுத்தப்படுதல், பயிர் சேத தகவல்களை பதிவு செய்கின்ற அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர்களால் அச்சந்தர்ப்பத்திலேயே திகதி முத்திரைகளைப் பொறித்து இழப்பீட்டு விண்ணப்ப பத்திரங்களை சேதங்களை அறிவித்த விவசாயிகளுக்கு வழங்க வேண்டிய போதிலும் திகதி முத்திரைகள் பொறிக்காது வழங்கியமை, விண்ணப்ப படிவங்களில் இழப்பீட்டினை கணிக்கும் (E பகுதி) பகுதியை பூரணப்படுத்தாது இழப்பீட்டினைச் செலுத்துவதற்காக அனுப்பி வைத்தல் ஆகிய குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன. | முத்திரைக்கு கொண்டு வரப்பட்டு விண்ணப்ப படிவத்தின் முதல் பக்கத்தின் இடது மூலையில் முத்திரை பொறித்து இழப்பீட்டினை கணிப்பீடு செய்யும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. 2020 சிறு போகத்திலிருந்து வழங்கிய விண்ணப்ப பத்திரங்களில் ‘‘ஈ’’ பகுதியில் முத்திரை பொறிக்கப்பட்டுள்ளதுடன் ‘‘ஈ’’ பகுதியில் பூரணப்படுத்தப்பட வேண்டிய தகவல்கள் இழப்பீட்டு கணிப்பீட்டின் போது உள்ளடக்கப்பட்டுள்ளன. இப்போகத்திலிருந்து மேற்கூறிய சிக்கல் தீர்த்து வைக்கப்பட்டுள்ளது என அறிக்கையிடுகின்றேன். | |
| (ஆ) | விவசாய தகவல்களை உள்ளடக்கிய முழுமையான தகவல் முறைமையானது தற்பொழுது வரை சபையிடம் இருக்கவில்லை. விவசாய தகவல்களை உள்ளடக்கிய மென்பொருள் மற்றும் நடமாடும் உள்ளீட்டினை உருவாக்குவதற்காக அமைச்சினால் ரூபா 10 மில்லியன் நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த துடன் 2020 திசெம்பர் 31 வரை சபையினால் மேற்கூறிய உள்ளீட்டினை உருவாக்குவதற்காக ரூபா 5 மில்லியன் செலவு செய்து உள்ளீட்டின் அரைவாசி | இச்செயற்திட்டத்தினை நிறுத்துதல் இடம்பெறவில்லை என்பதுடன் கம்பஹா மற்றும் பதுளை மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட சாத்தியவள ஆய்வின் (Feasibility Study) மூலம் பெற்றுக் கொள்ளப்பட்ட அனுபவத்திற்கு இணங்க இந்நிகழ்ச்சித்திட்டத்தினை நாடளாவியரீதியில் மேற்கொள்வதற்கு கருதப்படுகின்றது. அதற்குத் தேவையான செயற்திட்ட பிரேரணைகள் தற்பொழுது அமைச்சிற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | விவசாய தரவு முறைமையினைக் கட்டியெழுப்புதல் வேண்டும். |

உருவாக்கப்பட்டிருந்தது. அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர்களால் மாத்திரம் பயன்படுத்தக் கூடிய மட்டத்தில் உருவாக்கப்பட்டுள்ள இந்த உள்ளீட்டின் மூலம் கம்பஹா மற்றும் ஹம்பாந்தோட்டை மாவட்டங்களில் விவசாயக் காணிகளைப் படம் வரைதல் அரைவாசி முடிவுறுத்தப்பட்டிருந்தும் ஏனைய மாவட்ட அலுவலகங்களில் இணையதள வசதிகள் இல்லாமை, தகவல் தொழில்நுட்ப உபகரணங்கள் இல்லாமை ஆகிய காரணங்களின் அடிப்படையில் இதுவரை அமுல்படுத்தப்படாது காணப்பட்டது. 2020/21 பெரும்போகத்திற்காக தெளிவுபடுத்தும் கூட்டங்கள் ஹம்பாந்தோட்டை மற்றும் அனுராதபுரம் மாவட்டங்களில் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன. அதன் காரணமாக தேசிய முக்கியத்துவமுள்ள இக்கடமையானது எதிர்பார்த்த மட்டத்தில் பயன்பாட்டில் இல்லை என்பது அவதானிக்கப்பட்டது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதிச் சபையின் 2020 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களுடன் வரைபு ஆண்டறிக்கை | 2020 ஆம் ஆண்டிற்கான வரைபு ஆண்டறிக்கை தொடர்பாக செயல் நடவடிக்கைத் திட்டத்தை அடிப்படையாகக் கொண்ட | வரைவு ஆண்டறிக்கையில் கணக்கை சமர்ப்பிக்கின்ற திகதியில் |

| | | |
|---|---|---|
| சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் அதில் உள்ளடக்கப்பட வேண்டிய ஆண்டிற்கான ஒட்டுமொத்த நிதி செயலாற்றல் அறிக்கை, செயல் நடவடிக்கைத் திட்டத்தினை அடிப்படையாகக் கொண்ட செயலாற்றல் குறிகாட்டி, இனங்காணப்பட்ட நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்களை அடைந்து கொள்ளும் செயலாற்றல் என்பன சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | செயலாற்றல் குறிகாட்டிகள் மற்றும் இனங்காணப்பட்ட நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களை அடைந்து கொள்ளும் செயலாற்றல் அறிக்கை என்பவற்றை ஆண்டறிக்கையில் உள்ளடக்குவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. | உள்ளடக்கப்பட வேண்டிய அனைத்து தகவல்களும் உள்ளடக்கப்படுதல் வேண்டும். |